## செயல்முறைத் திட்டம்

நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

## செயல்முறைத் திட்டப் பிரிவு

| | |
|---|---|
| 100 | கடலோர நிலங்களில் வருவாயைப் பெருக்கும் சில ஆய்வுகள் |
| 200 | பல்லுயிர் வளம் |
| 300 | வளங்குன்றா ஊரக வாழ்வு |
| 400 | விடுபட்டவர்களைச் சென்றடைவது |
| 500 | கல்வி, பயிற்சி மற்றும் தகவல் தொடர்பு |
| 600 | சிறப்புத் திட்டங்கள் |


**மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்**

வளங்குன்றா வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆராய்ச்சி மையம்

மூன்றாவது குறுக்குத் தெரு

தரமணி நிறுவன வளாகம்

தரமணி, சென்னை 600 113

தொலைபேசி : 044- 2541229, 2541698

தொலைநகல் : 044 - 2541319

மின்னஞ்சல் : access@mssrf.res.in


# குழந்தைப் பராமரிப்புக்கான செயல்பாடுகள் கல்வி உத்திகள் மற்றும் சேவைகள்

# ஆ
# க்
# ஸ
# ஸ்

# ஆக்ஸஸ்

குழந்தைப் பராமரிப்புக்கான
செயல்பாடுகள், கல்வி உத்திகள் மற்றும்
சேவைகள்

**மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி
நிறுவனம்**

செயல் முறைத் திட்டம் 400
விடுபட்டோரைச் சென்றடைவது

## நோக்கம்

குழந்தைப் பராமரிப்பு, கல்வி - வளர்ச்சி மற்றும் பிற நலப்பணிகளை மேம்படுத்தும் ஆதரவு சேவைகளில் ஈடுபட்டு, கொள்கை மாற்றங்களுக்காக வழக்காடுதல்.

குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறுமியரின் தேவைகளை இணைத்து சந்திக்கும் சேவைகளுக்கு ஆதரவளித்தல்.

இடர்ப்பாடுகள் மற்றும் அழுத்தம் மிகுந்த சூழ்நிலைகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு, குறிப்பாக பணிபுரியும் தாய்மார்கள், நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், வறுமையில் வாடும் குழந்தைகள், சிறுமியர், உழைக்கும் மற்றும் சாலையோர குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் தனிக்கவனம் பெறுகின்றனர்.

## செயல்பாடுகள்

- செயல் நோக்கங்களின் அடிப்படையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றின் முடிவுகளைப் பரவலாக்குவது.
- குழந்தைப் பராமரிப்பு பணியாளர்களுக்கு ஏற்ற வகையில் பயிற்சிகளையும், பயிற்சியாளர் பயிற்சிகளையும் ஏற்று நடத்துதல்.
- குழந்தைப் பராமரிப்பு சேவைகளில் தனிக் கவனம் செலுத்திச் செயல்படும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல். பட்டறைகள், கருத்தரங்கங்கள், கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் அல்லது பிரசுரங்கள் மூலமாக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல்.
- தகவல் தொடர்பு சாதனங்கள் உருவாக்குதல், பிரசுரங்கள், ஒளி-ஒலிப் பேழைகள், படங்கள், சிறு படங்கள், பாரம்பரிய கிராமிய மற்றும் நடத்து கலைகளுக்கு ஆதரவளித்தல்.
- குழந்தைப் பராமரிப்பு மையம் தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் தகவல்கள் பதிவு செய்து மதிப்பீடு செய்தல்.
- குழந்தைப் பராமரிப்பு சேவைக்கான பயிற்சிக் கையேடுகள், பாடத்திட்டம், கொள்கை வகுத்தல் போன்ற செயல்பாடுகளுக்காக தகவல் ஆதாரங்களை உருவாக்குதல்.
- மதிப்பீடுகள், பாடத்திட்டம் வடிவமைத்தல், தொடர் பயிற்சிகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை மேம்படுத்துதல்.
- மேற்கூறிய நோக்கங்களை அடையும் வகையில் பிற செயல்பாடுகளை வகுத்தல்.

## மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

முனைவர் மா.சா. சுவாமிநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட முதல் உலக உணவுப் பரிசு நிதியின் மூலம் ஜூலை மாதம் 1988-ம் ஆண்டு மா. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், வணிக நோக்கமில்லாத பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளையாகும். இந்நிறுவனம், பல்வேறு அரசுத்துறைகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சித் துறை, இயக்குநரகம்-பொது (வரிவிலக்குகள்) மூலமாக 1961ஆம் ஆண்டின் வருமான வரிச்சட்டத்தின் கீழ், வேறு விதியின்படி 80G மற்றும் 305ஆம் பிரிவின் உட்பிரிவு (i) (ii) ன் கீழ் நிதி வழங்குபவர்களுக்கு வரிவிலக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## குறிக்கோள்கள்

நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நீடித்த மனித வளர்ச்சியை கீழ்காணும் வகைகளில் மேம்படுத்துவதாகும்.

- பொருளாதாரத் திறன், சமுதாய சமநிலை மற்றும் வளங்குன்றா சுற்றுச்சூழல் ஆகிய மூன்றையும் நோக்கி ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்கும் வகையில் தொழில்நுட்பத்தைப் பரவலாக்குவதில் தனிக் கவனம் செலுத்துதல்.
- தொழில் நுட்ப வளர்ச்சியின் முழுப் பயனும் கிராமத்தின் நலிவுற்ற பெண்களைச் சென்று சேரும் வகையிலான அறிவாற்றல் மற்றும் நிர்வாகத் திறன்களை வலியுறுத்துதல்.